DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.144/2025**

Prosecution witness **PW.1 (LW.1)**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜாக்கர்தி கௌதம் | Caste | : |
| Husband Name | : கௌதம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 45 |
| Time | : | | |

**(Accused absent. Petition filed and allowed. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **20.05.2026**

**20.05.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது டென்ட் ஹில்லில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில் விபத்தில் இறந்து போனவர் எனது கணவர் ஆவார். 25.06.2025ம் தேதியன்று மதியம் 01.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது எனது பக்கத்து வீட்டுக்காரர் சந்தீப் என்பவர் என்னிடம் எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக என்னிடம் கூறினார். நான் உடனடியாக குன்னூர் அரசு மருத்துவமனைக்கு சென்று எனது கணவரை பார்த்தேன். அவரது நிலைமை மோசமாக இருந்ததால் நான் மருத்துவரிடம் அது குறித்து கேட்டேன். அவர் எனது கணவரை மேல்சிகிச்சைக்காக உதகை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு கூறினார். ஆனால் நான் கோயம்புத்தூரிலுள்ள மருத்துவமனைக்கு எனது கணவரை மேல்சிகிச்சைக்கு கொண்டு செல்ல திட்டமிட்டேன்.

2. அதன்படி நான் எனது கணவரை கோயம்புத்தூருக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்றுகொண்டிருந்த போது காட்டேரி அருகே செல்லும் போது எனது கணவரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்ததால் மீண்டும் குன்னூர் அரசு மருத்துவமனைக்கே கொண்டு வந்தோம். ஆனால் எனது கணவரை பரிசோதித்த மருத்துவர் எனது கணவர் இறந்துவிட்டதாக கூறினார்.

நான் உடனடியாக எனது கணவருக்கு எவ்வாறு விபத்து நடந்தது என எனது கணவரை மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்த நபர் முகமது சலீமிடம் விசாரித்த போது அவர் எனது கணவர் அவரது இருசக்கர வாகனத்தில் சேலாஸ் நோக்கி சென்று கொண்டிருந்த போது கேரளா மாநில பதிவெண் கொண்ட ஒரு காரானது எனது கணவர் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார்.

3. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ளது எனது கையொப்பம் தான், அந்த புகார் மனுவை நான் தான் அருவங்காடு காவல் நிலையத்தில் கொடுத்தேன் (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எனக்கு தமிழ் தெரியாததால் அப்போது என் உடன் இருந்த ராம்குமார் என்ற நபர் தான் எனக்கு புகார் மனுவை எழுதிக்கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.